**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூலை - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

FWC

| தரம் :- 12 (2020) | கிறிஸ்தவ நாகரிகம் | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

**அறிவுறுத்தல்கள்**

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

1) பண்பாடு என்பது,
1. தேர்ந்த திறன் பொருளுடன் தொடர்புடையது.
2. புதுமைத்தன்மையை வலியுறுத்தி நிற்பது.
3. அகவயமானது.
4. ஓர் ஆட்சி முறைமை.
5. பல நகரங்கள், அரசாங்கம் போன்ற பகுதிகளை உள்ளடங்கியது.

2) தலைவனுக்கு ஆட்சிசெய்யும் உரிமையை கடவுளே வழங்கியதாக நம்பப்பட்ட நாகரிகம்.
1. கிரேக்க நாகரிகம் 2. உரோம நாகரிகம் 3. பாரசீக நாகரிகம்
4. மொசப்பத்தேமியா நாகரிகம் 5. சிந்துவெளி நாகரிகம்

3) கீழ்வரும் கூற்றுக்களில் எகிப்திய நாகரிகத்தோடு தொடர்புபட்ட கருத்துக்களைத் தெரிவு செய்க.
A. பைப்பிரஸ் என்ற புல் எழுதப் பயன்படுத்தப்பட்டது.
B. ஆப்பு வடிவ எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டது.
C. விளக்கெண்ணெய், பேரீச்சம்பழம், அத்திப்பழம் முதலியவை மருந்துகளாக பயன்படுத்தப்பட்டன.
D. கணித எண்ணக்கருக்கள் பயன்படுத்தப்பட்டது.
E. கலண்டர் முறை காணப்பட்டது.
1. ACD 2. BCD 3. ACE 4. CDE 5. BDE

4) 'ஹெல்லனிசம் என்பது'
1. மொசப்பத்தேமிய நாகரிகமும் எகிப்திய நாகரிகமும் இணைந்த கூட்டு.
2. கிரேக்க நாகரிகமும் கிழக்காசிய நாகரிகமும் இணைந்த கூட்டு.
3. கிரேக்க நாகரிகமும் மொசப்பத்தேமிய நாகரிகமும் இணைந்த கூட்டு.
4. கிரேக்க நாகரிகமும் உரோம நாகரிகமும் இணைந்த கூட்டு.
5. எகிப்திய நாகரிகமும் அசீரிய நாகரிகமும் இணைந்த கூட்டு.

5) கூற்று : இஸ்ராயேலர் 200 ஆண்டுகளுக்கு மேலாக அசீரியரின் ஆட்சியின் கீழ் வாழ்ந்தனர்.
காரணம் : வடஅரசு, தென் அரசு பிளவுபட்டு கி.மு 722 இல் வட அரசு கைப்பற்றப்பட்டது.
1. கூற்று சரி, காரணம் பிழை 2. கூற்று பிழை, காரணம் சரி
3. கூற்று பிழை, காரணம் பிழை 4. கூற்று சரி, காரணம் சரி
5. கூற்று, காரணம் பற்றி எதுவும் கூறமுடியாது.

6) உரோமைய பேரரசிற்கு அடித்தளமிட்டவர்.
1. பொம்பே 2. அலெக்சாண்டர் 3. ரோமுலஸ்
4. சைரஸ் 5. அரிஸ்ரோட்டில்

agaram.lk

❖ **பின்வரும் அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு 7, 8, 9 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| ஆண்டு | நிகழ்வுகள் |
|---|---|
| A. கி.மு 333 – கி.மு 63 | D. பபிலோனிய நாடுகடத்தல். |
| B. கி.மு 384 – கி.மு 322 | E. மகா அலெக்சாண்டர் |
| C. கி.மு 604 – கி.மு 586 | F. அரிஸ்ரோட்டில் |

7) கிரேக்க கலாச்சாரம் எகிப்து முதல் ஆப்கானிஸ்தான் வரை பரவியதை காட்டும் கூற்றுக்கள்.
1. A யும் F உம் 2. A உம் D உம் 3. B உம் D உம்
4. A யும் E உம் 5. C உம் D உம்

8) கிரேக்க மெய்யியல் வழியாக முன்வைத்த காரணகாரிய கொள்கையோடு தொடர்புடைய கூற்றுக்கள்.
1. B யும் F உம் 2. A உம் F உம் 3. C உம் D உம்
4. C யும் E உம் 5. A உம் D உம்

9) இஸ்ரயேல் மக்கள் மத்தியில் பபிலோனிய நாகரிகம் தாக்கம் செலுத்தியமை தொடர்பான கூற்று.
1. A யும் E உம் 2. A உம் D உம் 3. C உம் F உம்
4. C யும் D உம் 5. B உம் E உம்

10) இஸ்ராயேலை ஆட்சி செய்ய இறைவன் அபிஷேகம் செய்த அரசர்களில் மிகச் சிறந்த ஆட்சியை உருவாக்கியவர்களாக கருதப்படுபவர்.
1. சவுல், யோனத்தான், தாவீது 2. சவுல், தாவீது, சாலமோன்
3. சவுல், சாமுவேல், சாலமோன் 4. தாவீது, யோசுவா, சாமுவேல்
5. சாமுவேல், சிம்சோன், தாவீது

11) மேற்கு மலைப்பகுதியை புவியியல் அடிப்படையில் பிரிக்கக்கூடிய எண்ணிக்கை.
1. 1 2. 7 3. 4 4. 3 5. 5

12) கீழ்வரும் கூற்றுக்களில் இஸ்ரயேலரின் தென்அரசு பற்றிய பிழையான கூற்று.
1. ரெகபெயாம் எருசலேமை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான்.
2. தாவீது அரச குடும்பமே தொடர்ச்சியாக ஆட்சி செய்தது.
3. எரோபவாம் கி.மு 922 முதல் 901 வரை ஆட்சி செய்தான்.
4. எசாயா இறைவாக்கினர் மெசியாவின் வருகையை முன்னறிவித்தனர்.
5. யோசபாத், அமட்சியா ஆகிய அரசர்கள் சிறப்பாக ஆட்சி செய்தனர்.

13) எருசலேம் நகர மதில் கட்டியெழுப்பப்பட்ட ஆண்டு
1. கி.மு 444 2. கி.மு 922 3. கி.மு 356 4. கி.மு 539 5. கி.மு 597

14) யூப்பிரட்டீஸ் - தைகிறீஸ் நாரிகம் பற்றிய சரியான கூற்றுக்களை தெரிவு செய்க.
A. தற்போதைய ஈராக் நாடு மொசப்பதேமியா என்று அழைக்கப்பட்டது.
B. இங்கு கணிதம், மருத்துவம், வானசாஸ்திரம் வளர்ச்சி பெற்றிருந்தது.
C. மொசப்பத்தேமியாவின் அரசன் முழுப் பிரதேசத்தையும் ஆட்சி செய்தான்.
D. விவசாயமும் மிருக வளர்ப்பும் இப்பிரதேசத்தின் பிரதான வாழ்வாதாரமாக காணப்பட்டது.
1. A, B, D 2. A, C, D 3. B, C, D 4. B, D, E 5.C, D, E

15) 1வது ஏரோது அக்ரிப்பா பற்றிய சரியான கூற்று
1. நீதிக்கும், நேர்மைக்கும், அன்பிற்கும் பெயர் போனவர்.
2. பெனராஸ் எனும் இடத்திற்கு “பிலிப்பு செசரியா” என பெயரிட்டார்.
3. திருத்தூதரான யாக்கோபுவை (செபதேயுவின் மகன்) கொலை செய்தான்.
4. கி.பி 34 இல் வாரிசு இன்றி இறந்தான்.
5. இவர் பெரிய ஏரோதின் மூத்த மகன்.

agaram.lk

16) “பரிசேயர்” என்பதன் பொருள்.
1. பிரிந்து நிற்பவர். 2. இணைந்து நிற்பவர் 3. சேர்ந்து நிற்பவர்
4. குழுவாக நிற்பவர் 5. சரியாக நிற்பவர்.

17) ஜெருசலேம் ஆலயம் முற்றாக அழிக்கப்பட்ட காலப்பகுதி.
1. கி.பி 68 2. கி.பி 70 3. கி.பி 80 4. கி.பி 69 5. கி.பி 75

18) எசீனியர் என்போர்.
1. தனியான வாழ்க்கை வாழ்ந்தனர்.
2. தமது தலைவருக்கு கட்டுப்படாமல் வாழ்வோர்.
3. உடமைகள் அனைத்தையும் தனியாக கொண்டிருந்தனர்.
4. கி.பி 5ம் நூற்றாண்டளவில் வாழ்ந்தோர்.
5. மாலைவரை மீண்டும் வேலை செய்து இரவு உணவில் பங்கேற்பர்.

19) பாலஸ்தீனாவின் பிரதான நிலப்பகுதி.
1. நாசரேத்து, கானா, நயீன், கர்பர்நாகும்
2. நாசரேத்து, எப்ரோன், எருசலேம், நயீன்.
3. எருசலேம், பெத்தானியா, எரிக்கோ, நயீன்.
4. நாசரேத்து, கானா, பெத்தானியா, பெத்தலகேம்.
5. பெத்தானியா, எரிக்கோ, கானா, கர்பர் நாடும்.

20) புனித பவுலின் மனமாற்றமானது.
1. சமாரியாவிற்கான பாதையில் நடைபெற்றது.
2. தமஸ்குவிற்கான பாதையில் நடைபெற்றது.
3. எருசலேமிற்கான பாதையில் இடம்பெற்றது.
4. எபேசில் நடைபெற்றது.
5. பிலிப்பி நகர் தொழுகைக் கூடத்தில் நடைபெற்றது.

(20 x 1 = 20 புள்ளிகள்)

agaram.lk

## பகுதி II

அறிவுறுத்தல்.

❖ **பகுதி 'அ' இல் இரண்டு வினாக்களையும், பகுதி 'ஆ' இல் இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

**'அ'**

1) 1. யூதர்களின் முக்கிய திருவிழாக்கள் 4 தருக?
   2. யூதர்களின் வழிபாட்டில் முதலிடம் பெறும் 4 பலிகளை தருக?
   3. இஸ்ரயேலரின் வழிபாட்டில் சிறப்பான இடம் பெறும் செபம் பற்றி 4 விடயங்கள் குறிப்பிடுக?
   4. யூத திருமணம் பற்றி 4 விடயங்கள் குறிப்பிடுக.
   5. யூதர்களின் ஓய்வு நாள் அனுசரிப்பு பற்றி 4 விடயங்கள் தருக. (5 x 4 = 20 புள்ளிகள்)

2) 1. இயேசுவின் புதுமைகளின் நான்கு வகைகளை குறிப்பிடுக.
   2. இறை ஆட்சியின் தன்மையை விளக்க புனித மத்தேயு நற்செய்தியில் குறிப்பிடப்படும் 4 உவமைகள் தருக?
   3. அரிஸ்ரோட்டில் முன்வைத்த 4 காரண காரிய தொடர்புகளை குறிப்பிடுக.
   4. கிறிஸ்தவ நாகரிகத்தில் கிரேக்க நாகரிகம் ஏற்படுத்திய தாக்கம் 4 குறிப்படுக.
   5. புனித மத்தேயு குறிப்பிடும் இறையரசு அறிவிப்பில் 4 அறிவுரைகளை தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

3) 1. யூதர்களின் வாழ்வில் முதன்மை பெற்ற சமயக் குழுக்களின் பிரிவுகள் 4 தருக.
   2. யூத தலைமைச் சங்கங்கள் பற்றி 4 விடயங்கள் தருக.
   3. வரிதண்டுவோர் பற்றி 4 விடயங்கள் தருக.
   4. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த சமாரியர் பற்றி 4 விடயங்கள் முன்வைக்குக.
   5. நீதித் தலைவர்களுக்கு இறைவனால் ஒப்படைக்கப்பட்ட முக்கிய பணிகள் 4 தருக.

(5 x 4 = 20 புள்ளிகள்)

**'ஆ'**

4) 1. தூய ஆவியின் வருகை ஆரம்ப திருச்சபை வரலாற்றில் முக்கியம் வாய்ந்த நிகழ்வாக காணப்பட்டமையை விளக்குக.
   2. தொடக்க கிறிஸ்தவர்களின் பண்புகள் இன்றைய கிறிஸ்தவர்களின் வாழ்வில் காணப்பட வேண்டும் என்பதை தெளிவுபடுத்துக. (10 x 2 = 20 புள்ளிகள்)

5) 1. மலைப் பொழிவு பற்றி சுருக்கமாக விளக்குக.
   2. கடந்த ஈஸ்ரர் தினத்தன்று நாட்டில் நடைபெற்ற அப்பாவி மக்களின் படுகொலை சம்பவத்தினை மலைப்பொழிவின் மதிப்பீட்டின் அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(10 x 2 = 20 புள்ளிகள்)

6) 1. கிறிஸ்தவ நம்பிக்கையின் வாழ்வியலின் வளர்ச்சிக்கு பெரிதும் பங்களிப்பு செய்த கிறிஸ்தவ குடும்ப வாழ்வு பற்றி பவுல் 1 கொரிந்தியர் 7 இல் குறிப்பிடும் படிப்பினையை விளக்குக.
   2. புனித பவுலின் வாழ்க்கையில் ஏற்பட்ட சவால்களும் அவற்றை அவர் வெற்றி கொண்ட முறையும் இன்றைய கிறிஸ்தவர்களுடைய வாழ்வில் எவ்வாறு முன்மாதிரியாக காணப்படுகின்றதென்பதை விளக்குக. (10 x 2 = 20 புள்ளிகள்)

7) 1. புனித யோவான் இயேசுவின் சாவும் அடக்கமும் பற்றி குறிப்பிடும் மூன்று விடயங்களை குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை விளக்குக.
   2. கிறிஸ்துவின் உயிர்ப்பானது கிறிஸ்தவ நம்பிக்கையை பொருளுள்ள தாக்கியுள்ளமையை விளக்குக. (10 x 2 = 20 புள்ளிகள்)

agaram.lk